# வினா விடை

## புனித பவுல் அடிகள் திருமுகம்

### உரோமையர், கொரிந்தியர் 1 & 2 மற்றும் கலாத்தியர்

1 **பவுல் கீழ் கண்டவற்றில் எதற்காக தேர்ந்து கொள்ளப்பட்டவர்**

அ. ***நற்செய்திக்காக***

ஆ. திருமுழுக்கு கொடுப்பதற்காக

இ குழு அமர்வுகள் நடத்துவதற்காக

ஈ வேறு எதற்காக

2. **பவுல் அடிகள் ஏழுதிய திருமுகங்களில் சோகமானது எது?**

அ. உரோமையர்

ஆ 1 கொரிந்தியர்

இ. ***2 கொரிந்தியர்***

ஈ. கலாத்தியர்

**3. நேர்மையாளர் யார் ?**

அ. கடின உழைப்பாளி

ஆ. கடவுளுக்காக உழைப்பவர்கள்

இ. ***நம்பிக்கையில் வாழ்பவர்***

ஈ. மறைபரப்பு பணியில் ஈடுபடுபவர்கள்

**4. தவறு செய்தவர்களை மன்னிக்க வேண்டுமென கொரிந்தியர்களை எதற்க்காக பவுல் அடிகள் கேட்டுக்கொண்டார்**

அ. ***அதிக துயரத்தால் வாடக்கூடாது என்பதற்காக***

ஆ. குடும்பத்தினருடன் மீண்டும் சேர்ந்து கொள்வதற்காக

இ. பவுல் அடிகளின் தலைமைப் பண்பை உணர்ந்து கொள்வதற்காக

ஈ. பாவத்தின் விளைவை உணர்ந்து கொள்வதற்காக

**5. யார் மூலமாக பவுல் அடிகள் அருளையும் திருத்தூதர் நிலையும் பெற்றார் ?**

அ. பர்னபாஸ்

ஆ. இறைத் தந்தை

இ. பேதுரு

ஈ. ***இயேசு கிறிஸ்து***

**6. ஆண்டவரின் ஆவி எங்குள்ளதோ அங்கே இருப்பது**

அ. புதையல்

ஆ. இறைவன்

இ. ***விடுதலை***

ஈ. மேல் கண்ட எல்லாமே

**7. யார் இறைவனுக்கு ஏற்புடையவர் ?**

அ. திருச்சட்டத்தை கேட்பவர்

ஆ. ***திருச்சட்டத்தின்படி நடப்பவர்***

இ. திருச்சட்டத்தை இயற்றுபவர்

ஈ வேறு எதற்காக

**8. பவுல் அடிகள் யாரை உண்மையான யூதன் என்கிறார் ?**

அ. ***உள்ளத்தால் விருத்தசேதனம் செய்தவர்***

ஆ. திருச்சட்டத்தை படித்தவர்

இ. திருச்சட்டத்தை காப்பவர்

ஈ. விருத்தசேதனம் செய்தவர்

**9. பவுல் அடிகள் கலாத்தியர்களை ஏன் முட்டாள்கள் என்றார்**

அ. ஏனைய சபையினர் அறிவாளிகள் என்பதால்

ஆ. திருச்சட்டத்தை பின்பற்றாதலால்

இ. ***ஆவியினால் ஆரம்பித்து உடல் இச்சையினால் முடிப்பதால்***

ஈ. பவுல் அடிகளுக்கு கீழ்படியாததால்

**10. உரோமையருக்கு கடிதம் எழுத பவுல் அடிகளுக்கு உதவியவர் யார்?**

அ. திமோத்தி

ஆ. தீத்து

இ. ***தேர்சியுஸ்***

ஈ. பீப்

**11. வாக்கியத்தை நிறைவு செய்க "நாம் கிறிஸ்துவோடு இறந்தோமானால்"**

அ. நாம் அவரைப்போல் தோன்றுவோம்

ஆ. நாம் அவரைப்போல் புதுமைகள் செய்வோம்

இ. நாம் விண்ணகம் ஏறி செல்வோம்

ஈ. ***நாம் அவரோடு வாழ்வோம்***

**12. நாம் நம்பிக்கையினால் செல்வோம் ....................................அல்ல**

அ. அறிவினால்

ஆ. அன்பினால்

இ. ***பார்வையால்***

ஈ. மனிதர்களால்

**13. யார் சொன்னது. "பாவத்திற்கு மரித்து நீங்கள் கிறிஸ்துவில் கடவுளுக்கு வாழ்வதாக கருதுங்கள்"**

அ. பேதுரு

ஆ. ***பவுல்***

இ. இயேசு

ஈ. தந்தையாகிய கடவுள்

**14. நாம் கிறிஸ்துவின் தூதர்கள். ஏனெனில் .......................**

அ. ***கடவுள் நம் மூலமாக வேண்டுகோள் விடுக்கின்றார்***

ஆ. நாம் கிறிஸ்துவின் சாட்சிகள்

இ. நம்மை மீட்பதற்க்காக கடவுள் இயேசுவை அனுப்பினார்

ஈ. கிறிஸ்துவின் திருத்தூதர்களாக நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்

**15. பாவத்தின் சம்பளம் எது?**

அ. ***மரணம்***

ஆ. நரகம்

இ. வாழ்வு

ஈ. பரிசு

**16. கணவன் உயிரோடிருக்கும்பொழுது இன்னொருவருடன் வாழும் பெண்ணை எப்படி அழைக்கிறோம் ?**

அ. கன்னி

ஆ. விதவை

இ. ***விபச்சாரி***

ஈ. மனைவி

**17. "மகிழ்ச்சியோடு கொடுப்பவர்களை இறைவன் அன்பு செய்கிறார்" என்பது எதில் காணக்கிடக்கிறது**

அ. உரோமையர் 10:12

ஆ. 1 கொரிந்தியர் 11:16

இ. ***2 கொரிந்தியர் 9:7***

ஈ. கலாத்தியர் 2:4

**18. போதகர்களைப் புகழ, பவுல் அடிகள் இவ்வாறு கூறுகிறார்**.

அ. ஆண்டவரின் பெயரைக் கூவி அழைப்பவர்கள் மீட்பு பெறுவர்

ஆ. ***நற்செய்தியை போதிப்பவர்களின் பாதங்கள் எவ்வளவு அழகானது***

இ. நான் கிறிஸ்துவுக்காக ஆனது போல் என்னை பின்பற்றுங்கள்

ஈ. அவரை நம்புபவர்கள் வெட்கத்துக்கு உள்ளாக மாட்டார்கள்

**19. பவுல் அடிகள் எந்த வம்சத்தை சார்ந்தவர் ?**

அ. ***பெஞ்சமின்***

ஆ. யூதா

இ. மனாசே

ஈ. எப்ராயீம்

**20. “பெருமை பாராட்டுகிறவன் ஆண்டவரில் பெருமை கொள்ளட்டும்” யார் கூறியது ?**

அ. இயேசு

ஆ. கடவுள்

இ. மோசஸ்

ஈ. ***திருமறைநூல்***

**21. “உங்களை துன்புறுத்துவோருக்கு ஆசி கூறுங்கள். ஆசி கூறுங்கள். சபிக்க வேண்டாம். மகிழ்வாரோடு மகிழுங்கள். அழுவாரோடு அழுங்கள் .” யார் யாரிடம் கூறியது?**

அ. இயேசு கூட்டத்தினரிடம்

ஆ. கடவுள் இஸ்ராயேலரிடம

இ. ***பவுல் அடிகள் உரோமையரிடம்***

ஈ. பவுல் அடிகள் கொரிந்தியரிடம்

**22. “நாம் வாழ்வதும் இறப்பதும் எல்லாம் ஆண்டவருக்காக” எதில் எழுதபட்டிருக்கிறது**.

அ. 1 கொரிந்தியர்

ஆ. கலாத்தியர்

இ. 2 கொரிந்தியர்

ஈ. ***உரோமையர்***

**23. “நான் தரும் அருள் உமக்கு போதும்” யார் யாரிடம் கூறியது**

அ. பவுல் அடிகள் கலாத்தியரிடம்

ஆ. ***இயேசு பவுல் அடிகளிடம்***

இ. கடவுள் மோசேயிடம்

ஈ. பவுல் அடிகள் கொரிந்தியரிடம்

**24. கொரிந்திய சமூகத்தினரிடம் இருந்த நான்கு பிரிவுகள் எவை?**

அ. ***பவுல், அப்போல்லோஸ், கேபாஸ் & கிறிஸ்து***

ஆ. பவுல், அப்போல்லோஸ், திமோத்தி & தீத்து

இ. பவுல், பேதுரு, அப்போல்லோஸ் & திமோத்தி

ஈ. மேல் கண்டவை எதுவுமில்லை.

**25. கொரிந்துவில் பவுல் அடிகளிடம் திருமுழுக்கு பெற்றவர் யார் யார்?**

அ. சீலா, திமோத்தி, தீத்து, அப்போல்லோஸ்

ஆ. ***கிரிஸ்புஸ், கையுஸ், மற்றும் ஸ்தேபானுஸ் வீட்டார்***

இ. அப்போல்லோஸ் மற்றும் வீட்டார்

ஈ. மேற்கண்டவர் யாரும் இல்லை

**26. "நான் பலவீனமாயிருக்கையில் ................................" நிரப்புக**

அ. ஆண்டவரிடம் வேண்டுகிறேன்

ஆ. ***நான் வலிமையுள்ளவனாகிறேன்***

இ. பயப்படுகிறேன்

ஈ. உதவி தேடுகிறேன்

**27. பவுல் அடிகள் 1 கொரிந்தியனில் குறிப்பிடும் ஒழுக்கக் கேடான செயல் எது?**

அ. ஓரினச்சேர்க்கை

ஆ. திருமணத்திற்கு முன் உறவு கொள்வது

இ. விபச்சாரி குழந்தைகள் பெறுவது

ஈ. ***தந்தையின் மனைவியோடு வாழ்வது***

**28. நம்பிக்கையாளர்களை தான் துன்புறுத்தியதைப் பற்றி பவுல் அடிகள் எந்த கடிதத்தில் குறிப்பிடுகிறார்?**

அ. உரோமையர்

ஆ. 1 கொரிந்தியர்

இ. 2 கொரிந்தியர்

ஈ. ***கலாத்தியர்***

**29. "உங்கள் உடல் தூய ஆவியின் ஆலயம்" என்று பவுல் அடிகள் எந்த கடிதத்தில் குறிப்பிடுகிறார்**.

அ. ***1 கொரிந்தியர்***

ஆ. கலாத்தியர்

இ. 2 கொரிந்தியர்

ஈ. உரோமையர்

**30. தூய ஆவியின் கனிகள் பற்றி குறிப்பிடும் திருமுகம் எது ?**

அ. உரோமையர்

ஆ. 1 கொரிந்தியர்

இ. 2 கொரிந்தியர்

ஈ ***கலாத்தியர்***

**31. நீதிமன்றம் செல்வது பற்றி பவுல் அடிகள் கொரிந்தியர்களிடம் சொல்வது**

அ. நம்பிக்கையாளர் நீதிமன்றம் சென்று நீதி பெற வேண்டும்

ஆ. கோயில் குருக்களிடம் செல்ல வேண்டும்

இ. யூத சமூக தலைமையிடம் செல்ல வேண்டும்

ஈ. ***நம்பிக்கையாளர் நீதிமன்றம் செல்லக் கூடாது***

**32. பவுல் அடிகளிடம் ஒப்படைக்கப்பட்ட நற்செய்திப் பணியானது**

அ. விருத்தசேதனம் செய்தவர்களுக்காக / யூதர்களுக்காக

ஆ. ***விருத்தசேதனம் செய்யாதவர்களுக்காக / புறவினத்தாருக்காக***

இ. ஏழைகளுக்காகவும் உதவி தேவைப்படுபவர்களுக்காகவும்

ஈ. மேற்கண்டவர்களுக்காக அல்ல

**33. “ அறிவு இறுமாப்பையே உண்டாக்கும்; அன்பு ஞான வளர்ச்சி தரும்” என்ற பவுல் அடிகளின் அறிவுரை எதற்காக ?**

அ. ***சிலைகளுக்கு படைக்கப்பட்ட உணவுக்காக***

ஆ. ஆண்டவரின் இரவு உணவை அசிங்கபடுத்தாமலிருக்க

இ. பெண்கள் முக்காடு போடுவதற்காக

ஈ மேற்கண்ட எல்லாவற்றிற்குமாக

**34. பல மொழி பேசுவதற்கும் இறைவாக்கு உரைப்பதற்குமிடையே பவுல் அடிகள் விரும்புவது**

அ. பல மொழி பேசுவது

ஆ. ***இறைவாக்கு உரைப்பது***

இ. இரண்டுமே

ஈ. ஏழு வரங்களை

**35. பவுல் அடிகள் கேபாஸை கடிந்துகொண்டார். ஏனென்றால் கேபாஸ்**

அ. யூதர்களின் சார்பாக நடுநிலை தவறியதால்

ஆ. ***நற்செய்தியின் உண்மையின்படி சரிவர நடக்காததால்***

இ. நற்செய்தியை போதிக்காமல் காலத்தை வீணடித்ததால்

ஈ. மேற்கண்ட எதுவுமில்லை

**36. உடலின் உயிர்ப்பை விளக்குகையில், பவுல் அடிகள் கூறுகிறார்.**

அ. ***விதைக்கப்படுவது மனித உடல், உயிர்த்தெழுவது ஆவிக்குரிய உடல்***

ஆ. விதைக்கப்படுவது மனித உடல், உயிர்த்தெழுவது விலங்கின் உடல்

இ. சாவே வாழ்வின் முடிவு

ஈ. இறந்தவர் இயேசுவின் இரண்டாம் வருகைக்குமுன் உயிர்த்தெழுவர்

**37. இரண்டு உடன்படிக்கைகளாக பவுல் அடிகள் குறிப்பிடும் பெண்கள்**

அ. ராக்கேல் மற்றும் லியா

ஆ. ஏவா மற்றும் ரெபேக்கா

இ. ***சாரா மற்றும் ஹாகார்***

ஈ. நவோமி மற்றும் ரூத்

**38. ஆண்டவர் நிறுவிய இறுதி உணவு பற்றி குறிப்பிடும் திருமுகம்**

அ. உரோமையர்

ஆ. ***1 கொரிந்தியர்***

இ. 2. கொரிந்தியர்

ஈ. கலாத்தியர்

**39. முக்காடு பற்றி பவுல் அடிகள் கூறுவது**

அ. இச்சையினால் எரிவதை விட முக்காடு போடுவது மேல்

ஆ. இறைவனின் மாட்சியை மறைக்கும்

இ. கணவர்களுக்கு கீழ்ப்படிவது நல்லது

ஈ. ***இந்த வழக்கம் எங்கள் நடுவிலும் இல்லை; கடவுளின் எந்த சபையிலும் இல்லை***

**40. கலாத்தியருக்கு எழுதிய திருமுகம்படி, இயேசுவால் தடுத்தாட்கொண்டபின் பவுல் அடிகள் சென்ற இடம்**

அ. ஜெருசலேம்

ஆ. ***அரேபியா***

இ. தார்சுஸ்

ஈ. கோவில்